OS.No.38/2013

Dated : 20.12.2022.

Time: 11.44 a.m. To 12.06 p.m.

P.W. - 1 சாட்சி சத்தியபிராமாணம் செய்யப்பட்டு மீண்டும் வரவழைக்கப்பட்டு

**1**ம் பிரதிவாதி சார்பாக குறுக்குவிசாரணை

1. 14.03.2011 ல் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி ஒப்பந்தம் கடனுக்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் அது தவறு. அது நிலத்திற்காக ஏற்படுத்தப்பட்டது. மேற்படி ஆவணத்தில் கால அவகாசம் 2 வருடம் கொடுக்கப்பட்டது. அதனால் அது கடனுக்காக கொடுக்கப்பட்டது என்றால் அது தவறு. மேற்படி ஒப்பந்தம் ரூ. 4,99,000/- ஏற்படுத்தப்பட்டது என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் ஒப்பந்த தேதியில் எந்த தொகையும் 1 ம் பிரதிவாதியிடம் போய் சேரவில்லை என்று சொன்னால் அது தவறு. மேலும் மீதம் கிரய தொகையை வைத்துக்கொண்டு நான் கிரயம் செய்ய அழைத்தேன் என தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் அந்த தேதியில் எனக்கு 4,50,000/- கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் அது தவறு.

2. நான் நேரடியாக சென்று அழைத்தேன் என்று தவறாக சொல்கிறேன் என்றால் அது சரியல்ல. 03.08.2012 ல் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன். மேற்படி 1 1/2 ஆண்டுகள் நான் கிரயம் செய்ய தயராக இருந்தேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது தவறு. மேலும் அறிவிப்பு பிறகு 7 மாத காலம் நான் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் அது தவறு. நான் அப்போதே மீத கிரய தொகையையும் வைத்திருந்தேன் என்றால் சரிதான். ஏன் அப்போதே முழு தொகையையும் செலுத்தி கிரயம் செய்து கொள்ளவில்லை என்றால் 1ம் பிரதிவாதி என்னிடம் குடும்பத்தில் பிரச்சனை இருப்பதல் சிறிது காலத்திற்கு கிரயம் செய்து கொள்ள சொன்னதால் அப்போதே தொகை செலுத்திக்கொள்ளமுடியவில்லை. அந்த விவரம் ஒப்பந்ததத்தில் சொல்லப்படவில்லை என்றால் அவர் வாய்மொழியாக சொன்னதுதான். மேற்படி விவரத்தை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் அது தவறு. வா.சா.ஆ.1 ல் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு பிறகு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

3. 1ம் பிரதிவாதி என்னிடம் 3 லட்சம் பணம் கேட்டார் என்றும், அதற்காக நான் 1,80,000/- ரூபாயை 03.03.2011 ல் கடன் கொடுத்தேன் என்றால் அது தவறு. மேலும் ரூ.20,000 ஆயிரம் மதிப்பிலான விதை மஞ்சல் 1ம் பிரதிவாதி பெற்றார் என்றும், ஆக எனக்கு 2 லட்சம் தான் கடனாக திரும்ப செலுத்தவேண்டும் என்றால் அது தவறு. அதற்காக தான் அவர் நிலத்திற்கான ஆவணங்களை நான் வாங்கி வைத்தேன் என்றால் அது தவறு. மேலும்

ஒப்பந்தத்திற்கு பிறகு 1 லட்சம் கடனாக கேட்டிருந்தார் என்றால் அது தவறு. அதன் பிறகு 1 லட்சம் அவர் பெற்றுக்கொண்டு மொத்தம் 3 லட்சம் என்னிடம் கடன் வாங்கியிருந்தார் என்றால் அது தவறு. ஒப்பந்த தேதியின் அந்த சொத்தின் மதிப்பு ரூ.10 லட்சத்திற்கு மேல் இருக்கும் என்றால் அது தவறு. மேற்படி வா.சா.ஆ.1 கிரயத்திற்காக ஏற்படுத்தவில்லை அது கடனுக்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் அது தவறு. அவர் பெற்ற கடனை மட்டுமே திரும்ப செலுத்த கடமைபட்டவர் என்றால் அது தவறு. கிரயம் எழுதி தரவேண்டும். இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>இளவர் **3**ம் பிரதிவாதிக்காக நீதிமன்ற பாதுகாவலர் சார்பாக குறுக்குவிசாரணை</u>

மேற்படி இளவரின் கல்விக்காகவோ, அவருக்காகவோ எவ்வித தொகையையும் தரப்படவில்லை என்றால் அது தவறு. மேலும் அதுபோல் வாசகம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி 1ம் பிரதிவாதி செய்த கிரய ஒப்பந்தம் 3ம் பிரதிவாதி இளவரை கட்டுப்படுத்தாது என்றால் அது தவறு. மேலும் அந்த ஒப்பந்தத்திற்கு பின்னிட்டு அந்த தொகை குறித்த எந்த லாபமும் 3ம் பிரதிவாதிக்கு செல்லவில்லை என்றால் அது தவறு.

<u>மறுவிசாரணை- இல்லை.</u>

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan,**
**Subordinate Judge,**
**Attur.**